செய்தி வெளியீடு எண்–438 நாள்–11.6.2008

## <u>செய்தி வெளியீடு</u>

### <u>மாண்புமிகு மத்திய வேளாண்மை, நுகர்வோர் பாதுகாப்பு, உணவு மற்றும் பொது விநியோகத் திட்டத் துறை அமைச்சர் திரு.சரத் பவார் அவர்களுடன் மாண்புமிகு தமிழக உணவுத் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் சந்திப்பு</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் புது டெல்லியில் மாண்புமிகு மத்திய வேளாண்மை, நுகர்வோர் பாதுகாப்பு, உணவு மற்றும் பொது விநியோகத் திட்டத் துறை அமைச்சர் திரு. சரத் பவார் அவர்களை, மாண்புமிகு மத்திய தகவல் மற்றும் தொலைத்தொடர்பு துறை அமைச்சர் திரு. ஆ. ராஜா அவர்களுடன், 11.06.2008 அன்று மாலை 3.30 மணிக்கு சந்தித்து, பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கோதுமையை தமிழக மக்கள் அதிகமாக விரும்பி உண்பதால், கூடுதலாக 10,000 மெ.டன் கோதுமை ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். மாண்புமிகு மத்திய வேளாண்மை, நுகர்வோர் பாதுகாப்பு, உணவு மற்றும் பொது விநியோகத் திட்டத் துறை அமைச்சர் அவர்கள் இது குறித்து விரைவில் பரிசீலித்து உரிய நடவடிக்கை மேற்கொள்வதாக தெரிவித்தார்கள்.

இச்சந்திப்பின்போது, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை செயலாளர் திரு. கே. சண்முகம், இ.ஆ.ப., மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திரு. க. பணீந்த்ர ரெட்டி, இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.